# தியாகராயநகரில் கண்ட உண்மை.

## ஹிந்தி ஆந்திரருக்கும் ஆபத்தானதே.

### நலமென்றெண்ணி ஏமாந்திருந்தேன்.

### தியாகராயர்நகர் சொற்பொழிவுகள் என் கண்களைத் திறந்தன.

### தெலுங்கும் திராவிட பாஷைகளில் ஒன்றே.

### ஹிந்தியால் தெலுங்கும் அழியும்.

### ஆந்திரரும் ஆந்திரக் கலைகளையும் மொழியையும் காப்பாற்ற வேண்டியது தான்.

### ஒரு ஆந்திர நண்பர் விளக்கம்.

ஜூன் 5-ந்தேதி "ஸண்டே ஆப்ஸர்வர்" பத்திரிகையில் ஒரு ஆந்திர நண்பர் எழுதியிருப்பதாவது.-

ஹிந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி இயக்கத்தைப்பற்றியும் கட்டாய ஹிந்தி பாடத்தைக்குறித்தும் தமிழர்களுக்குள்ளிருந்து வரும் கிளர்ச்சியைக்குறித்தும் கவலையற்றவனாயிருந்தேன்.

சில வேளைகளில் தமிழர்கள் மட்டும் ஏன் ஹிந்தியை புகுத்தக் கூடாது என்று எதிர்க்கிறார்கள் என்று கூட சிந்தித்ததுண்டு.

முதல் முதலாக நான், சமீபத்தில் தியாகராயநகரில் நடைபெற்ற ஹிந்தி எதிர்ப்புக்கூட்டத்திற்குச் சென்றேன். அங்கு அவர்கள் கூறும் காரணங்களுக்குச் செவி சாய்த்தேன்.

அந்தக்காரணங்கள் என்னைப் பிரமிக்கச் செய்து விட்டன.

கூட்டத்தில் தோழர் ஸ்டாலின் ஜெகதீசனைப் பார்த்தேன்.

தமிழர்கள் தாய் மொழியைக் காக்க உயிரையும் திரணமாக மதித்து உயிர்த்தியாகம் செய்ய முன் வந்ததைக் கண்டு என் உள்ளம் உருகிற்று.

தமழ்த் தோழர்கள் கொண்டுள்ள ஊக்கத்தில்பகுதி தான் ஆந்திர மாகாணப் பிரிவினை விஷயத்தில் நமது தோழர்கள் கொண்டுள்ளார்கள் என்று சொல்லுவேன்.

ஹிந்தி புகுத்துவதை நாமும் எதிர்க்கவேண்டும்.

ஏனெனில் நமது பாஷை திராவிட மொழியின் ஒரு பிரிவேயாகும்.

நமது நாகரிகத்திலும் கலையிலும் மதிப்பு வைத்திருக்கும் நம்மவர்கள் நம் தாய்மொழிக்குப் பங்கம் வரப் பார்த்துக்கொண்டிருத்தல் கூடாது.

ஹிந்தியால் நம் தாய்மொழிக்கு என்ன கேடு வந்து விடும் என்று நான் உதாசீனமாக இருந்ததுண்டு.

ஆனால், அக் கூட்டத்தில் கூறப்பட்ட வாதங்களைக் கேட்டபின் நம் தாய்மொழியாகிய தெலுங்கும் அழிக்கப்பட்டு ஒழிக்கப்பட்டு விடும் என்பதை உணர்ந்தேன்.

இளம் வயதில் நம் குழந்தைகள் எவ்வாறு ஏக காலத்தில் இரண்டு மூன்று பாஷைகளைக் கற்க முடியும்?

இப்பொழுதே நம்தாய் மொழி ஆங்கில மொழியால் க்ஷீணதசையடைந்துவந்திருக்கிறது. அதோடு இந்த ஹிந்தியும் புகுத்தப்பட்டால் தாய்மொழி வளர்ச்சி எப்படி ஏற்படும்?

நம்மவர்கள் அன்னிய பாஷையில் பேசுவதுபோல் தாய் மொழியில் தாராளமாகத் தெளிவாகபேச முடிவதில்லை

இந்த நிலையில் ஹிந்தியை கட்டாய பாடமாகப் புகுத்திவிட்டால் ஆங்கிலத்தையும், ஹிந்தியையுந்தான் கற்க விசேஷ சிரத்தை காட்டுவார்களே தவிர தமிழைப்பற்றி ஒரு சிறிதும் கவலைப்படமாட்டார்கள்.

**தாய்மொழி எங்ஙனம் விருத்தியடையும்?**

அயர்லாந்திலகூட எத்தனையோ நூற்றாண்டுகளாக ஆங்கிலத்தையே கற்றுவந்தவர்கள். இன்று தம் தாய்மொழியை விருத்திபண்ண முற்பட்டிருக்கிறார்கள்.

ஆனால் இந்தியாவிலுள்ள விநோதப் பிறவிகளாகிய தேசீயவாதிகளோ ஹிந்தி என்ற ஒரு அன்னிய மொழியை கட்டாயப் பாடமாகப் புகுத்தப் பார்க்கிறார்கள்.

ஒரு குறிப்பிட்ட பாஷையை பொது பாஷையாக்குவது என்பது சாத்தியமானதல்ல.

நம் நாடு பலதிறப்பட்ட கலை மொழி நாகரிகத்தைக்கொண்ட ஒரு பெரும் தேசம்.

இதில் எப்படி ஒருபொது பாஷை ஏற்படுத்த முடியுமென்பதை நேற்று பதவியேற்ற புத்திமான்கள் அறியவில்லையே!

ஆங்கிலம் அரசியல்—ராஜாங்க பாஷையாக விளங்கும் வரை ஹிந்தியைக் கட்டாய பாடமாக்குவதை நான்பலமாக ஆட்சேபிக்கிறேன்.

ஒரு வேளை, ஆங்கிலத்தை எடுத்து விட்டால் வேண்டுமானால் இதைப்பற்றி யோசிக்கலாமென்று கருதுகிறேன்.

தாய் மொழிக்காக தோழர் ஸ்டாலின் ஜெகதீசன் அவர்கள் செய்யும்தியாகத்தை நான் பெரிதும் பாராட்டுகிறேன்.

இதுவரை, காங்கரஸ்காரர்கள் தான் சிறைக்குச் செல்வதாகக் கேள்விப்பட்டோம்.

ஆனால் இன்றோ தாய் மொழிக்காக சிறை செல்லவும், சாகும் வரை உண்ணா விரதமிருக்கவும் பலர் துணிந்து விட்டார்கள்.

இந்தச் சமயத்தில் கனம் சி. ராஜகோபாலாச்சாரியார் கௌரவத்தைக் கருதாமல் எண்ணற்ற இளஞ்சிங்கங்களின் அருமையான உயிரைக்காக்கமுன் வர வேண்டுகிறேன்.

இல்லையேல் அவர் நமக்கும் தமது குலத்துக்கும் தீராப் பழியைத் தேடிக்கொள்வார் என்றே கருத வேண்டியிருக்கிறது.

தோழர் ஸ்டாலின் ஜெகதீஸ் தமது முயற்சியில் வெற்றி பெறுவாராக.

---

## தூத்துக்குடியில் 3-வது ஹிந்தி எதிர்ப்பு ஊர்வலமும் பொதுக் கூட்டமும்.

(நமது நிருபர்)

தூத்துக்குடி, ஜூன் 3.

இன்று இந்நகர் ஷண்முகபுரத்திலிருந்து, சாயங்காலம் 5 மணிக்கு நகர் முக்கியஸ்தர்களாகிய தோழர் ஆ. பெரியகுமாரு நாடார், முனிசிபல் கவுன்சிலர் பி. வி. பொன்னுச்சாமி நாடார் அவர்கள் முனிசிபல் கவுன்சிலர் அண்டு பஞ்சாயத்துக் கோர்ட் தலைவர், இவர்களது தலைமையின்கீழ், ஓர்பிரமாண்டமான ஊர்வலம் ஒன்று புறப்பட்டு நகர்வலம் வந்து, ஷி ஷண்முகபுரம், சுயமரியாதை வாலிப சங்கத்தின் முன்பாகவுள்ள, மைதானத்தில் இரவு 9 மணிக்கு பிரபல வழக்கறிஞரும் தமிழ் அபிமானியுமான தோழர் எம். ஏ. பெரும்படையான் பிள்ளை பி. ஏ. பி. எல். அவர்கள் தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அதுசமயம் பிரபல வழக்கறிஞர்களும், சைவப் பெரியார்கள் பலரும் வந்திருந்தது குறிப்பிடத்தக்கது" தலைவர் அவர்களாலும், நகர் முக்கிய அட்வோகேட்டும் தமிழன்னைக்காக சகலமும் தியாகம் செய்யும் பெருந்தகையுமாகிய, தோழர் இ. வென்னிமாலைப் பிள்ளை பி. ஏ. பி. எல். அவர்களாலும், ஹிந்தி நுழைப்பால் நற்தமிழுக்கும் தமிழர்களுக்கும் ஏற்படும் தொல்லைகளையும், ஆரம்பத்திலேயே ஹிந்தி பேயைக் கொன்று தமிழன்னையைக் காப்பாற்று வதற்கு ஏற்பட்டுள்ள ஹிந்தி எதிர்ப்புப் போரில் தமிழனாய் பிறந்த ஒவ்வொருவனும் கட்சி வேற்றுமை அகற்றி ஒன்று பட்டுழைக்க வேண்டுமென மிகவும் விரிவாயும் விளக்கமாயும் வீரமாயும் பேசியது மிகவும் ஊக்கம் கொடுத்துள்ளது. இத்தலைவர்களைப் பின்பற்றி தோழர்கள் எம். வைகுண்டம், டாக்டர், தமன், அக்னீஸ்வரன் ஆர். கே. பெருமாள், முதலியவர்கள் சொற்பொழி வாற்றினர். நகரெங்கும் ஹிந்தி எதிர்ப்புப் பேச்சே. தலைவர் அவர்களால், ஹிந்தி ஒழியவேண்டும் அக்ஷரங்கள் அழிதல் வேண்டுமென, சாகுமளவும் உண்ணாமை என்ற உறுதிகொண்டு, இன்றைக்கு 34 நாட்களாய் பட்டினிகிடக்கும் தமிழன்பர், தோழர் கே. என். ஸ்டாலின் ஜெகதீஸ் அவர்களையும், நடந்த 1-6-38-லிருந்து முதல் அமைச்சர் வீடுமுன்பு பட்டினி கிடந்து கைது செய்யப்பட்டிருக்கும் தோழர் பல்லடம் பொன்னுசாமி இவர்களது வீரத்தியாகத்தை போற்றுவதாயும், கொண்டுவரப்பட்ட தீர்மானம் ஏகமனதாய் நிறைவேறியது. மேலும், ஹிந்தி எதிர்ப்புக்குத்தக்கது செய்யவும், எதிர்ப்புப் போர் காரியக் கமிட்டி அங்கத்தினர்களை இவ்வூருக்கு தருவிக்கவும், தோழர்கள், அக்னீஸ்வரன், ஆர். கே. பெருமாள் எஸ். நடராஜன், டி. பால்பாண்டியன், முதலியவர்களடங்கிய கமிட்டி ஒன்றும் நிறுவப் பெற்று கூட்டம் இனிது முடிந்தது. ஹிந்தியை ஒழிக்க புது மார்க்கட் பிரபல வியாபார வாலிபத் தோழர்கள் காட்டும் உற்சாகமும் ஒத்துழைப்பும் பெரிதும் போற்றத்தக்கதாகும்.

---

## சீன-ரஷ்ய இரகசிய ஒப்பந்தம்.

### யுத்த தளவாடங்களை ரஷ்யா சப்ளை செய்யும்.

### சோவியத் ராணுவ அதிகாரியை சீனா அமர்த்திக் கொள்ளும்.

### ஜப்பானுக்கு விரோதமாக பிரசாரம் நடத்தும்.

டோக்கியோ, ஜூன் 6.

மாஸ்கோவுக்கு ஜெனரல் ஸன் போ விஜயம் செய்ததன் பயனாக சீனாவுக்கும் சோவியத் ரஷ்யாவுக்கும் இரகசியத்தில் ஒரு ஒப்பந்த மேற்பட்டிருப்பதாக ஜப்பானிய சர்க்கார் நியூஸ் ஏஜென்ஸி பிரகாரம் சம்பந்தகுந்த முறையில் ஒரு செய்தி வெளியாயிருக்கிறது.

சோவியத் ராணுவ நிர்வாக ஆலோசனையாளரை சீனா வேலைக்கமர்த்திக் கொள்ள வேண்டுமென்றும், ரஷ்யர்களின் கட்டளைக்கிணங்க சியாங்கேய் ஷேக்கின் நிர்வாக ஜப்பானியருக்குவிரோதமானபிரசாரத்தைநடத்த வேண்டுமென்றும், 2 யந்திர சாதனமுள்ள டிவிஷன்களையும், 72 ஆகாய விமானங்களையும், யுத்தத்தளவாடங்களையும் சீனாவுக்கு சோவியத் சர்க்கார் சப்ளை செய்ய வேண்டு மென்றும் ஒப்பந்தமேற்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

இவ்வொப்பந்தத்தை அமலுக்குக் கொண்டு வருவது சம்பந்தமாக கீழ்க்கோடி செம்படையின் தளகர்த்தாவிருக்கும் மார்ஷல் புளுச்சர் மாஸ்கோவுக்குத் திருப்ப அழைக்கப்பட்டு விட்டதாக ஒரு செய்தி கூறுகிறது.